முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்.

சாட்சியின் சான்றுரை - PW1

O.S.No. 44/2017

பெயர்:திரு/திருமதி : இந்திராணி நாள். 31.03.2021

**சாட்சி 1 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சபாபதி ஆச்சாரியின் அண்ணன் வேலாயுதம் உள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. சபாபதி ஆச்சாரி ஒரே ஒரு ஆசாரிதான். அவருக்கு கூடப்பிறந்தவர்கள் யாரும் இல்லை. சபாபதி ஆச்சாரியின் அண்ணன் வேலாயுதம் அவரின் பிள்ளை பொன்னுசாமி என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. சபாபதி ஆச்சாரிக்கு நான்கு மகன்கள் என்றால் இரண்டு மகன்கள் தான். சபாபதி ஆச்சாரியின் பெரிய மகன் பரமசிவம் ஆசாரி, நடேச ஆசாரி, ஆறுமுக ஆசாரி, சீனுவாச ஆசாரி, ஒரு பெண் பவுணாம்பாள் என் தாயார். ராஜாம்பாளுக்கும் வைத்திக்கும் வாதி தான் பிறந்தவர் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்து உள்ள சாலைஅகரத்திற்கு சென்று பார்த்துள்ளேன். 9,10,11 பிரதிவாதிகள் வீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள். 9 முதல் 11 பிரதிவாதிகள் சுமாராக 30 வருடமாக அனுபவித்து வருகிறார்கள். அதுகுறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. வழக்கு சொத்தில் 9 முதல் 11 பிரதிவாதிகளின் வகையராக்களின் நான்கு சமாதி உள்ளது என்றால் பார்த்தது இல்லை. சபாபதி ஆச்சாரியின் கிரையம் பெற்ற சொத்தின் சக்குபந்தி எனக்கு தெரியும். சபாபதி ஆச்சாரியின் கிரையம் பெற்ற சொத்தில் நீங்களோ வைத்தி ஆசாரியின் வாரிசுகளோ எந்த காலததிலும் அனுபவித்தது கிடையாது மற்றும் கூட்டுகுடும்பமாக இருந்தது கிடையாது என்றால்

சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் சமீபத்தில் வருவாய் துறையில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வைத்தி ஆசாரி எழுதி வைத்த உயில் பற்றி எனக்கு தெரியாது. வைத்தி ஆசாரி இறந்த வருடம் எனக்கு தெரியாது. வைத்தி ஆசாரியின் இறப்பு சான்றிதழ் வாங்கவில்லை. நீங்கள் சபாபதி ஆசாரி, வைத்தி ஆசாரி, பொன்னுசாமி ஆசாரி ஆகியோர் இறந்துவிட்டார்கள் என்று சான்றிதழ் இல்லாமல் சொல்வது தவறு. உங்கள் மூதாதையர்கள் வழக்கு சொத்தில் இருந்ததற்கான ஆவணம் இருக்கிறதா என்றால் இல்லை. 1 முதல் 8 வரையிலான பிரதிவாதிகள் முருகன், சக்திவேல், இளங்கோ ஆகியோர் உங்களுக்காக இந்த வழக்கை நடத்துகிறார்கள் என்றால் சரிதான். நீங்கள் வழக்கில் சொன்ன மாதிரி வைத்தி ஆசாரிக்கு 1/4 பாகம் மற்ற வகையறாக்களுக்கு 1/4 பாகம் சொல்வது தவறு என்றால் சரியல்ல. ஏற்கெனவே வைத்தி ஆசாரி மகன் பரமசிவம், ஆறுமுகம், நடேச ஆசாரி மனைவி சாந்தா, பொன்னுசாமி ஆசாரி மகன் ரங்கநாதன் ஆகியோர் ஏற்கெனவே விழுப்புரம் நீதிமன்றத்தில் ஓ.எஸ் 846/1990 ஒரு வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு அதன் பேரில் மேல்முறையீடு செய்து அந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியாது. 10.06.1998ல் 11ம் பிரதிவாதி வழக்கு சொத்தை பாண்டிச்சேரியில் அடமானம் வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 9 முதல் 11 பிரதிவாதிகளுக்கு பாகத்தை அவரவர்களே அனுபவித்து தாவா சொத்தை வூஸ்டிங் செய்ததால் உங்களுக்கு பரிகாரம் செய்ய இயலாது என்றால் சரியல்ல. 10ம் பிரதிவாதி காலிமனையாக வைத்துள்ளார். 11ம் பிரதிவாதி அவரது பாகமான இடத்தில் வீடு கட்டியுள்ளார் என்று சொன்னால் வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் வீடு கட்டியுள்ளார். 9ம் பிரதிவாதி ராமலிங்கம் அவரது பாகத்தில் ஒரு

மரப்பட்டை போட்டு வியாபாரம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. 9 முதல்11 பிரதிவாதிகளுக்கு வருவாய் துறை ஆவணங்கள் தனித்தனியாக அவரவர் பெயர்களுக்கு உள்ளது என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நீங்கள் தாவா சொத்தில் அனுபவித்ததற்கான வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் விழுப்புரத்தில் சாலைஅகரத்தில் பிறந்தேன். நான் என் ஜாதகத்தில் விழுப்புரத்தில் சாலைஅகரத்தில் பிறந்தேன் என்று உள்ளது. நீங்கள் விழுப்புரத்தில் சாலைஅகரத்தில் பிறந்தேன் என்று கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. பவுணாம்பாள் நன்றாக உள்ளார்கள் என்றும் அவரை விசாரித்தால் விபரங்கள் தெரியும் என்பதால் நீங்கள் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்களுக்கு தாவா சொத்தில் உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல.